முதன்மை மாவட்ட நீதிமன்றம், தென்காசி
முன்னிலை–திரு.பி.ராஜவேல், பி.எஸ்சி., பி.எல்.,
முதன்மை மாவட்ட நீதிபதி, தென்காசி
2025–ம் ஆண்டு நவம்பர் திங்கள் 12–ம் நாள் புதன்கிழமை
I.A.No.11/2025 in O.S.No.37/2024
*****************

தமிழ்தாய் அறக்கட்டளை அதன் தலைவர்
பழனிவேலம்மாள் மூலம். ...மனுதாரர்/9–ம் பிரதிவாதி

/எதிர்/

1. வெ.சுப்பையா பாண்டியன் ...1–ம் எதிர்மனுதாரர்/வாதி
2. வெங்கடேசன் (இறப்பு)
3. மாரியம்மாள்
4. சுமதி
5. வெங்கடேசன்
6. சுப்பையா
7. தங்கத்தாய்
8. இளவர். சுவாஷினி
9. இளவர். திவ்யதர்ஷினி ... 2 முதல் 9 எதிர்மனுதாரர்கள்/ 1 முதல் 8 பிரதிவாதிகள்

(இளவர் 8,9 எதிர்மனுதாரர்கள் தங்களது தாயாரும்,
பாதுகாவலருமான 7–ம் எதிர்மனுதாரர் தங்கத்தாய் மூலம்)

இந்த மனுவானது 12.11.2025–ம் தேதியன்று என் முன்னர் விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.ராஜு அவர்களும், 1–ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.கார்த்திக் குமார் அவர்களும், 5, 6 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.R.K.பாண்டியராஜ் அவர்களும், 7 முதல் 9 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.கிளிப்பாண்டி அவர்களும் முன்னிலையாகியும், 2–ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்ட நிலையிலும், 3, 4 எதிர்மனுதாரர்களை அழைத்தும் வருகையில்லாத நிலையில், அவர்களை தோன்றாத் தரப்பினர்களாகக் கருதியும், இரு தரப்பிலும் நிகழ்த்திய வாதுரைகளைக் கேட்டறிந்தும், சான்றாவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள்வரை என் பரிசீலனையிலிருந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

9-ம் பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்துள்ள அசல் வழக்கினை தள்ளுபடி செய்து உத்தரவிடக்கோரி மனுதாரரால் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர் தரப்பு மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட அபிடவிட்டின் சுருக்கம்**

பிராது தபசில் சொத்துக்களில் வாதியின் ¼ பங்கினை பிரித்து தரக்கோரி 1-ம் எதிர்மனுதாரர்/வாதியால் அசல் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்/1-ம் வாதியின் வழக்கானது, வாதியின் தந்தை வெள்ளையப்பதேவருக்கு தனித்துப் பாத்தியப்பட்டதாக கட்டசி செய்து வழக்கினை தாக்கல் செய்தும், அதன்பின்னிட்டு பிராது வழக்கு மூலத்தி'லி வாதியின் தாத்தாவிற்கு பாக கைத்தடி ஏற்பட்ட காலம் முதல் தபசில் சொத்துக்கள் பாத்தியப்பட்டதாகவும், சீர்திருத்த மனு பரிகாரத்தில் தபசில் சொத்துக்களானது பூர்வீக சொத்தில் ஏற்பட்ட வரும்படியைக் கொண்டு 30.06.1973 அன்று கிரையம் பெறப்பட்டு கூட்டாக அனுபவம் செய்யப்பட்டு வரப்பட்டது என முன்னுக்குப்பின் முரணாகவும், பிராதின் வழக்கு மூலங்கள் முழுமையாக தெரிவிக்காமலும் வாதியால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர்/9ம் பிரதிவாதி நடத்தி வரும் அறக்கட்டளை தலைவர் நிலையில் பிராதில் 1-ம் எதிர்மனுதாரர்/வாதியால் 9-ம் பிரதிவாதி கட்சி சேர்க்கப்பட்டுள்ளார். அறக்கட்டளை பொறுப்பாளர், நிர்வாகி, தலைவர் உள்ளிட்டோரை கட்சி சேர்த்து வழக்கு நடத்தும் முன் பின்பற்றவேண்டிய சட்ட நடைமுறைகளை பின்பற்றி வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை. காலவரையறை சட்டத்தின் பிரிவு 10-ன்கீழ் 1-ம் எதிர்மனுதாரர்/வாதி, 9-ம் பிரதிவாதி மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு சட்டப்படி தடை செய்யப்பட்ட ஒன்று. பிராதில் எதிர்மனுதாரர்/1-ம் பிரதிவாதி, அப்போது மைனராக இருந்து வந்த வாதிக்கும் சேர்த்து வாதியின் தாயார் சீனியம்மாள் உயிருடன் இருந்து வருவதை மறைத்து மோசடியாக 9-ம் பிரதிவாதிக்கு 04.01.1999-ல் பதிவு கிரையம் ஏற்படுத்திக் கொடுத்ததாக பிராதில் கட்சி செய்யப்பட்டுள்ளது. 1-ம் எதிர்மனுதாரர்/வாதியின் கூற்றுப்படி 04.01.1999-ல் கிரையம் ஏற்பட்டபோது அவரின் வயது 13. மைனர் உரிய வயதடைந்த காலத்திலிருந்து 3 ஆண்டுகளுக்குள் மோசடி கிரைய ஆவணம்

குறித்து தன் உரிமையை நிலைநாட்ட வழக்கு தாக்கல் செய்திருக்கவேண்டும். எனவே, 9-ம் பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்துள்ள அசல் வழக்கினை தள்ளுபடி செய்து உத்தரவிடக்கோரி மனுதாரரால் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>1–ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம்–</u>

மனுவில் கண்ட சங்கதிகள் அனைத்தும் பொய்யானவைகளாகும். மனு அபிடவிட்டில் சொல்லியுள்ள காரணங்களை மனுதாரரரே நிரூபணம் செய்ய கடமைப்பட்டவர். பிராதில் பிராது தபசில் சொத்துக்கள் வாதியின் தகப்பனாருக்கு பாத்தியப்பட்டு அனுபவித்து வந்துள்ளார் என்றே கட்சி செய்யப்பட்டுள்ளது. ஆனால், ஷை வாதியின் தகப்பனாருக்கு பிராது தபசில் சொத்துக்கள் வாதியின் தாத்தாவிற்கு 06.03.1988–ம் தேதிய கைத்தடி ஆவணத்தின் மூலம் கிடைக்கப்பெற்று அதன்பின்னர் வாதியின் தகப்பனாருக்கு வாரிசு அடிப்படையில் பாகத்தில் கிடைத்துள்ளது என்பதைத்தான் பிராது வழக்கு மூலத்தில் பிராது தபசில் சொத்துக்கள் வாதியின் தகப்பனாருக்கு கிடைத்தது என குறிப்பிட்டுள்ளார். அதாவது பிராது தபசில் சொத்துக்கள் எவ்வாறு வாதியின் குடும்பத்திற்கு கிடைத்தது என்பதை நிரூபிக்கவேண்டிய கடமை வாதிக்கே உள்ளது. அதனை நிரூபிக்கும் வகையில் ஷை கைத்தடி ஆவணத்தை பிராதுடன் 1–வது ஆவணமாக தாக்கல் செய்துள்ளார். சீர்திருத்த மனு அபிடவிட்டில் பிராது தபசில் சொத்துக்கள் வாதியின் தகப்பனார் கூட்டுக்குடும்ப சொத்தின் வருமானத்திலிருந்து கிரையம் வாங்கியதராக தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், ஷை மனுவிற்கு இந்த மனுதாரர்/9–ம் பிரதிவாதி எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்காமல் ஷை மனுவானது இந்நீதிமன்றத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே, தற்போது ஷை மனுவில் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று மனுதாரர்/9–ம் பிரதிவாதி கட்சி செய்ய சட்டப்படி முரணத்டைப்பட்டுள்ளார். பிராது தபசில் சொத்துக்கள் வாதியின் தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது என்பதால், அதில் வாதிக்கு வாரிசு அடிப்படையில் பங்கு உள்ளது என்பது நன்கு துலங்கும். ஆனால், வாதியின் பங்கினை சேர்த்து 1–ம் பிரதிவாதி கிரையம் கொடுக்க சட்டப்படி உரிமையில்லை. வாதியின் வழக்கினை

நிராகரித்து தள்ளுபடி செய்யவேண்டுமென்றால் சரியான காரணங்கள் சட்டப்படி இருக்கவேண்டும். ஆனால், மனுதாரரின் மனுவைப் பார்த்தாலே அவ்விதமான எந்த காரணமும் அதில் குறிப்பிடப்படவில்லை. எனவே, இம்மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

**4.** இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில்,

"மனுதாரர் கோரிய பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா?"

என்பதேயாகும்.

**5.** இம்மனுவில் இரு தரப்பிலும் சாட்சிகள் விசாரணை செய்யப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**6. பிரச்சனை–**

மனுதாரர் அசல் வழக்கில் 9ம் பிரதிவாதியாவார். 9ம் பிரதிவாதி அறக்கட்டளைக்காக அதன் பொறுப்பாளர் வழக்கு சொத்தின் ஒரு பகுதியை கிரையம் பெற்றுள்ளார். அசல் வழக்கு பாக்பிரிவினைக்காக தாக்கல் செய்யப்பட்டு, 1ம் பிரதிவாதி மேற்கொண்ட கிரைய ஆவணம் தனது பாகத்தை கட்டுப்படுத்த கூடியதல்ல என வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2007ம் ஆண்டு வழக்கு தாக்கல் செய்த பின்னர் 9ம் பிரதிவாதி 2025ம் ஆண்டில் வழக்கின் தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளார். இந்நிலையில் வழக்குரையை நிராகரிக்க இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**7.** உவிமுச கட்டளை 7 விதி 11 உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் (CPC) கீழ் ஒரு மனுவை நிராகரிப்பதற்கான காரணங்களாக வழக்கு மூலம் இல்லாதபோதும், மதிப்பீட்டுத் தொகையைத் திருத்தத் தவறும்போது, அல்லது போதுமான முத்திரை செலுத்தப்படாதபோதும், வழக்குரையை நிராகரிக்கலாம் என கூறப்பட்டுள்ளது.

**8.** உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் (CPC) பிரிவு 92, பொது தொண்டு அல்லது மத அறக்கட்டளைகள் தொடர்பான வழக்குகளை அட்வகேட் ஜெனரல் அல்லது அறக்கட்டளையில் ஆர்வமுள்ள இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் தாக்கல் செய்ய வேண்டும், அவர்கள் அட்வகேட் ஜெனரலிடமிருந்து எழுத்துப்பூர்வ ஒப்புதல் பெற்றிருக்க வேண்டும். அத்தகைய வழக்கானது அறக்கட்டளை நிர்வாகம் தொடர்பானதாகும். ஒரு அறங்காவலரை நீக்குதல், புதிய அறங்காவலரை நியமித்தல், சொத்துக்களை ஒப்படைத்தல் அல்லது ஒரு திட்டத்தை ஏற்படுத்துதல் போன்ற தீர்வுகளை வழங்குவதன் மூலம் அறக்கட்டளைகளை பாதுகாப்பதே இதன் நோக்கமாகும்.

**9.** மனுதாரர்/9–ம் பிரதிவாதி ஒரு அறக்கட்டளையாகும். 9–ம் பிரதிவாதி சார்பில் வழக்குரை சொத்தின் ஒரு பகுதி கிரையம் பெறப்பட்டுள்ளது. மனுதாரர் அறக்கட்டளையை யார் பிரதிநிதத்துவப்படுத்த தகுதியானவர் என்பதும் யார், யார் அதன் அறங்காவலர்கள் என்ற விபரம் எதுவும் கிரைய ஆவணத்திலும், மனுவிலும் கூறப்படவில்லை. எனவே எதிர்மனுதாரர்/வாதி தனக்கு கிடைத்த தகவல்களினடிப்படையில் மனுதாரரை வழக்கின் தரப்பினராக சேர்த்துள்ளார். இம்மனுவிலும் அறக்கட்டளையின் அறங்காவலர்கள் பெயர், விபரம் மற்றும் யார், யார் தரப்பினராக சேர்க்கப்பட வேண்டுமென குறிப்பிடாமலேயே 9ம் பிரதிவாதி உரிய முறையில் பிரதிநிதித்துவப் படுத்தப்படவில்லை என்று கூறப்படும் வாதம் பொருத்தமற்றது. மேலும் 9ம் பிரதிவாதிக்காக அதன் தலைவர் என்ற முறையில் அறக்கட்டளையை பிரதிநிதித்துவப்படுத்துவதாக இம்மனுவிற்கான பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள மனுதாரர்/9ம் பிரதிவாதி வழக்கில் 9–ம் பிரதிவாதி முறையாக பிரதிநிதித்துவப்படுத்தப்படவில்லை என்பது உள் முரணாகும்.

**10.** ஒரு வழக்கிற்கான வழக்குமூலம் என்பது அவ்வழக்கு தாக்கல் செய்யப்படும் நாளில் வாதியின் உரிமை மற்றும் அதற்கு ஏற்படக்கூடிய பாதிப்பு குறித்த அச்சம் இரண்டையும் உள்ளடக்கியதாகும். மனுதாரர் 04.01.1999 ல் வழக்கு சொத்தை கிரையம் பெற்றுள்ளார். வாதியின் வழக்குரையில் வழக்கின் இதர சொத்துக்கள் அதாவது

மனுதாரர் கிரையம் பெற்ற சொத்துக்கள் உட்பட விடுபட்ட சொத்துக்களும் பொதுக் குடும்ப சொத்து என பிரதிவாதிகளின் எதிர் வழக்குரை மூலம் தெரிந்து கொண்டதாக கூறியுள்ளார். எனவே வழக்கிற்கான காலவரம்பு மற்றும் மனுதாரருக்கு எதிரான பரிகாரம் கோரத்தக்க கால வரம்பு என்பது பொருண்மையும், சட்ட விளக்கமும் கொண்ட பிரச்சனையாகும். எனவே காலவரம்பு குறித்த பிரச்சனையை மட்டும் அடிப்படையாக கொண்டு வழக்குரையை நிராகரிக்க இயலாது.

**11.** வாதி வழக்குரையின் ஒரு பகுதியில் பொதுகுடும்ப வருமானத்திலிருந்து வெள்ளையப்ப தேவர் பெயரில் 1973ல் கிரையம் பெறப்பட்டுள்ளது எனவும் மற்றொரு பகுதியில் 1955ம் ஆண்டு செய்து கொண்ட பாக கைத்தடி மூலம் கிடைத்த சொத்து என முரண்படுகிறார் என்பதால் வழக்குரை நிராகரிக்கப்பட வேண்டுமென வாதிடப்படுகிறது. வாதி தனது வழக்குரைக்கான விளக்கத்தை சாட்சியம் மூலம் தெளிவுபடுத்த வாய்ப்பளிக்காமலேயே நிராகரிக்க வேண்டுமென்பது இயக்கை நீதிக்கு முரணானதாகும். எனவே, மனுதாரர்/9–ம் பிரதிவாதியின் இம்மனு அனுமதிக்கத்தக்கதில்லை என்று நான் தீர்மானிக்கிறேன்.

முடிவில், மனுதாரரின் மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணிணியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, பின் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025–ம் ஆண்டு நவம்பர் திங்கள் 12–ம் நாளன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

BALUCHAMY RAJAVEL
Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.12.15 15:54:08 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
தென்காசி.

**மனுதாரர் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்–** இல்லை.

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்–** இல்லை.

BALUCHAMY RAJAVEL
Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2025.12.15 15:54:17 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
தென்காசி.

****************************************************

முதன்மை மாவட்ட நீதிமன்றம், தென்காசி

**I.A.No.11/2025  in O.S.37/2024**

உத்தரவு

நாள்–12.11.2025

****************************************************